# VALVAI SEAMEN WELFARE ASSOCIATION

Vembady, Valvettithurai.

## வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

வேம்படி, வல்வெட்டித்துறை, இலங்கை

செயலாளர் : 0778223632 Reg.No. DS/VAD/N/SS/VOR/2012/57

Email : vaiswavvt@gmail.com
Web : Valvaimalumikal.com


# முத்துமாரி அம்மன் திருவிழாக்கால (6 வது) ஒன்றுகூடல் 2017

மேற்படி ஒன்று கூடல் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை காவல்கோட்டை என்றழைக்கப்படும் கல்லுரோட்டில் உள்ள சங்க இணைத்தலைவர் கப்டன் N. விநாயகமூர்த்தி அவர்களின் தோட்டத்தில் ஒரு ரம்மியமான சூழலில் மாலைப் பொழுதில் சுமார் 08.00 மணியளவில் ஆரம்பமானது. எமது அழைப்பினை ஏற்று சுமார் 40-50பேர் வரையானோர் கலந்து கொண்டனர். எமது சங்கப் பொருளாளர் திரு.T. சுந்தரமூர்த்தியின் தேவாரபாரயணத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. மூத்த மாலுமியும் எமது சங்க வளர்ச்சிக்காக அயராது பாடுபடுபவருமான திரு.K. பஞ்சலிங்கம் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியிருந்தார்.

ஆரம்பத்தில் அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதன் போது விசேடமாக எமது சங்க முன்னைநாள் தலைவர் அமரர் . கா. ரஞ்சனதாஸ், செயலாளர் திரு. R. சண்முகதாஸ் ஆகியோர் நினைவுகூரப்பட்டனர். அடுத்து சங்க இணைத்தலைவர் கப்டன் N. விநாயகமூர்த்தி மாலுமிகளுக்கான தொழில்வாய்ப்பில் உள்ள இடர்கள் (மந்தநிலை) பற்றி ஒரு தெளிவான விளக்கத்தை அளித்திருந்தார். புதிதாக C.D.C எடுத்து வைத்திருப்போருக்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவாகவே காணப்பட்ட போதிலும் அனுபவத்துடன் கூடிய தேவையான சகல சான்றிதழ்களும் வைத்திருப்போருக்கு வாய்ப்புக்களுக்கு குறைவில்லையென்றும் குறிப்பிட்டார். மேலும் எமது இளைஞர்கள் கப்பல் தொழிலில் மாத்திரம் தங்கியிராது ஏனைய தொழில்துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

அடுத்த சிறப்புரை ஆற்றிய சங்க இணைத்தலைவர் கப்டன் R. இராஜேந்திரா தனதுரையில் VaiSWA வினதும் வல்வை மாலுமிகளினதும் வரலாறு பற்றி தெளிவாக எடுத்தியம்பினார். புதிதாக C.D.C எடுத்த மாலுமிகளுக்கு VaiSWA வால் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க முடியாமைக்கான காரணிகளை தெரியப்படுத்தினார். இது பற்றி எமது கடந்த ஆண்டறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அனுபவம் வாய்ந்த மாலுமிகளுக்கு (Experienced Crew) தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதில் சிக்கல் இல்லை. எனினும் VaiSWA இதில் பொறுப்பெடுக்க விரும்பவில்லை, காரணம் சமீபத்தில் கூட எம்மூரில் இருந்து கப்பலில் வேலைசெய்த சிலர் கனடாவில் கள்ளமாக இறங்கி விட்டனர். எனவே இதனையும் கருத்தில் நாம் கொள்ள வேண்டும் என்றும் தலைமையுரையில் சொல்லப்பட்டதுபோல் இளைஞர்கள் தொழில்துறையில் மாற்றங்களை நாடவேண்டும் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

அடுத்து பேசிய எமது சங்கத்தின் சர்வதேச இணைப்பாளர் திரு. N. சிவரத்தினம் அவர்கள் தற்போதைய சூழலில் இப்படியொரு பதவி தேவையா? காரணம் சர்வதேச தொடர்பாடல் எதுவும் இல்லாத போதிலும் இப்பதவி தேவைதானா? என்று கேட்டு தலைமையுரை, சிறப்புரையில் சொன்னதுபோல் வேறு துறைகளை இளைஞர்கள் நாடவேண்டும் அதற்கு VaiSWA என்ன செய்கின்றது என்ற கேள்வியுடன் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார். NVQ என்றழைக்கப்படும் தேசிய தொழிற் கற்கைநெறியின்அதிகார சபையினர் தம்மைத் தொடர்பு கொண்டு ICT, Tailoring கற்கை நெறிகளை எமது ஊரிலும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யுமாறு கேட்டிருந்ததாகவும். ஒரு வகுப்பில் 20 பேர் வீதம் 6 மாதங்களைக் கொண்ட கற்கைநெறியாகவும் இவை அனைத்தும் இலவசமாக கிடைக்கும் எனவும் இது வெற்றியளிக்கும் பட்சத்தில் இதைத் தொடர்ந்து செய்யலாம் என்றும் வல்வை நகர சபையினர் பழைய நகரசபைக்கட்டத்தை வழங்குவதற்கு நிர்வாகம் இணங்கி இருப்பதாகவும் இந்த ஒழுங்கு கிட்டத்தட்ட முடியும் தறுவாயில் இருப்பதாகவும் இதற்கு இங்குள்ள ஆர்வலர்கள் ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டும் என்றார்.

அடுத்து சபையோர் கருத்துரையில் பேசிய DR.S. பூரணச்சந்திரன் அவர்கள் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தைப் பற்றி தெளிவுபடுத்தி தான் தன்னை இதில் ஈடுபடுத்தியுள்ள போதிலும் மாணவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்று தனது ஆதங்கத்தைத் தெளிவுபடுத்தினார். A/L அதாவது கல்விப் பொதுதாரதர வகுப்பில் விஞ்ஞானப்பிரிவில் 3 சித்திகள் சாதாதரண சித்தி என்றால் கூட அவர்களிற்கு வழிகாட்டி அவர்கள் மாதாந்தம் குறைந்தது ரூபா 50,000. 00 (ஐம்பதாயிரம்) சம்பாதிக்க முடியும் என உறுதி கூறியிருந்தார்.

அடுத்து வல்வையின் மூத்த மாலுமியான கப்டன் S. சிவநேசன் கப்பல் தொழிலில் தனது நீண்டகால அனுபவத்தை சுருக்கமாக கூறி எமது சங்கத்திற்கு ஒரு கட்டடம் இல்லாத குறைபற்றி தான் கடந்த பல கூட்டங்களில் வேண்டுகோள் விடுத்த போதிலும் வல்வை மாலுமிகளின் நலன்களை கவனிக்க இதுவரை முயற்சி செய்யப்படாமை கவலையளிக்கின்றது, ஒரு சரியான பொருத்தமான இடத்தை வாடகைக்கோ அன்றி சொந்தமாகவோ பெற்று மாலுமிகளின் நலன்புரிச் செயற்பாடுகளில் இச்சங்கம் ஈடுபட வேண்டும் என்றார். இதனால் கிடைக்கும் நன்மைகளாக

1. ஓய்வுநிலை மாலுமிகள் தினமும் ஒன்றுகூடலும்.
2. யோகா மற்றும் உள்ளக விளையாட்டுக்களை நடத்தலாம்.
3. புதிய மாலுமிகளுக்கான கற்கைநெறிகளை அனுபவமுள்ள மாலுமிகளின் உதவியுடனும் மற்றும் வரைபடங்கள் Projector என்பவற்றின் உதவியுடன் நடத்தலாம் என்றார்.

அடுத்து பேசிய கப்டன் N. கலைநேசன் இந்த VaiSWA வினை ஆரம்பித்தவர்களில் தானும் ஒருவர் என்றும் எம்மூர் இளைஞர்களின் மனோநிலை எடுத்தவுடனே பெரியளவில் வேலைவாய்ப்பினை எதிர்பார்ப்பதை விடுத்து கிடைக்கின்ற வேலையை முதலில் செய்து தம்மை முன்னேற்ற வேண்டும் என்றார்.

அடுத்து எமது சங்கத்தின் தீவிர ஆதரவாளரும் கனடாவில் எமது கிளையை நிறுவுவதற்கு காரணகர்த்தாவாகவும் இருந்த திரு.T.சண்முகதாஸ் அவர்கள் தமது கப்பல் அனுபவங்களைப் பகிரிந்து கொண்டதோடு VaiSWA விற்கு தன்னாலான உதவியை எந்நேரமும் செய்வதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். அடுத்து பேசிய பேராசிரியர் சபா. ரஜேந்திரன் தனது உரையில் எமது இளைஞர்களிடம் நிறையத் திறமைகள் இருக்கின்ற போதிலும் அது கல்லுப்போலவே இருக்கின்றது. கல்லு ஒரு இடத்தில் இருக்கும் போது அது கல்லாகத்தான் இருக்கும். ஆனால் உயரத்தில் இருக்கும் ஒரு கல்லை தட்டிவிட்டால் அது அருகில், கீழே இருக்கும் பொருட்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அதே போல் எமது இளைஞர்களை தட்டி எழுப்பவேண்டியது அவசியம் என்று கூறினார். இது (Potencial energy, Kinetic energy) என்ற தத்துவமாகும் என்று குறிப்பிட்டார். அடுத்து பேசிய கப்டன் A.ரவீந்திரதாஸ் கப்பல் துறையில் கப்பலில் மாலுமிகள் வேலை மாத்திரமின்றி இன்னும் நிறையத் தொழில்கள் இருக்கின்றது. என்றும் நாம் எமது சங்க செயற்பாடுகளை விரிவுபடுத்த சரியான காலம் விரைவில் வரும் என்றும் கூறினார். அடுத்து S.ரெட்ணலிங்கம், R.யோகன் ஆகியோர் பாடல்களைப் பாடியமை நிகழ்ச்சியை கலகலப்பாக்கியது. இறுதியில் செயலாளர் V.P.பாலேந்திரன் நன்றியுரை வழங்கினார். இந்த ஒன்றுகூடல் சுமார் 10.00 மணயளவில் இனிதே முடிவுக்கு வந்தது.

செயலாளர் தனது நன்றியுரையில் பின்வருவோரிற்கு தனது விஷேட நன்றிகளைத் தெரியப்படுத்தினார்.

1. கடந்த வருடம் போல இவ் வருடமும் சகல வசதிகளுடனும் கூடிய தனது ரம்மியமான தோட்டச் சூழலை இந் நிகழ்வுக்காகத் தந்துதவியதற்காக எமது சங்க இணைத்தலைவரும் கப்டனுமாகிய திரு.N. விநாயகமூர்த்தி அவர்களிற்கும்
2. இவ்விராப் போசனவிருந்திற்கு, சங்கத்தின் நிதியிலிருந்து எதுவித பணமும் செலவு செய்யக்கூடாது என்ற கொள்கைக்கு இணங்க, தமது சொந்தப் பணத்தை அன்பளிப்பு செய்த அனைத்து நலன் விரும்பிகளிற்கும்.

மற்றும்

3. இந்நிகழ்வினை தனது தொழில்நுட்பத்திறமையினால் காட்சிப்படுத்தி இலவசமாக எமக்கு படங்க ளைத் தந்துதவிய K.P என்றழைக்கப்படும் லண்டனில் வசிக்கும் திரு. குழந்தைவேல் பிறேம்குமார் அவர்களிற்கும்.

குறிப்பு: இந்நிகழ்வின் படத்தொகுப்பும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| இணைத்தலைவர் | செயலாளர் | இணைத்தலைவர் |
| கப்டன் N.விநாயகமூர்த்தி | V.P பாலேந்திரன் | கப்டன் R. இராஜேந்திரா |
| 0772454030 | 0778223632 | 0773068750 |

07.06.2017